DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.347/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | ராஜம்மாள் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 22.01.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பெரியசோளகண்ணிப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 சாமிதுரை எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது கணவரின் சகோதரரின் மகன்கள் ஆவார்கள். **(**சாட்சி எதிரிகளை அடையாளம் காண்பித்தார்**.)**

எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே எனது வீடு இருக்கும் இடத்தில் எல்லை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. 12.04.2025ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் நான் எனது வீட்டில் படுத்திருந்தேன் வெளியே சத்தம் கேட்டது நான் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரிகள் கம்பி மற்றும் தடியை வைத்துக்கொண்டு தேவடியா வெளிய வாடி என்று என்னை திட்டி என்னிடம் பிரச்சனை செய்தார்கள். இதை பார்த்த எனது கணவர் அங்கு வந்தபோது ஆஜர் எதிரி ஆனந்த் மூங்கில் கம்பால் எனது கணவரின் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். எனது கணவர் கீழே விழுந்துவிட்டார் அவருக்கு தலையில் இருந்து ரத்தம்

வந்துகொண்டிருந்தது.

எனது கணவரை நான் சிகிச்சைக்காக செம்மேடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது கணவரை மேல் சிகிச்சைக்காக நான் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மூன்று நாட்கள் எனது கணவர் அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**